# 2022 இலையுதிர்கால கொவிட்-19-தடுப்பூசி குறித்த தகவல்கள்

## முக்கியமானவையின் சுருக்கம்

- கொவிட்-19 தொற்றுநோயின் தற்போதைய வேளையில் சுவிசில் ஏறத்தாழ அனைத்து நபர்களும் ஒன்றில் தடுப்பூசி பெற்றுள்ளார்கள் மற்றும்/அல்லது நோய் ஏற்பட்டு சுகமடைந்துள்ளார்கள். உங்களது நோய்த்தடுப்புச்சக்தி கொரொனா வைரசுக்கு ஏற்றவாறு எதிர்கொண்டுள்ளது. தற்போது சுற்றிவரும் வைரஸ் விதங்கள் முன்னரைப் போலல்லாது மென்மையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. இதன்படி 2022 இலையுதிர்காலத்திற்கு ஏற்ற புதிய விதிமுறைகளும் மற்றும் அதற்கேற்ற விதமாகத் தடுப்பூசி பெறும் பரிந்துரைகளும் தரப்படுகின்றது.
- விசேடமாக கொவிட்-19 தொற்றக்கூடிய ஆபத்தில் உள்ள நபர்கள் 2022 இலையுதிர்காலத்தில் கடுமையான நோய்த் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவதற்காக ஆகக் குறைந்தது தற்காலிகமாக பூஸ்டர் தடுப்பூசி மூலம் பாதுகாப்பை மேம்படுத்திக் கொள்ளலாம். ஆகவே பூஸ்டர் தடுப்பூசி அனைவருக்கும் அதிலும் விசேடமாக தொற்றக்கூடிய ஆபத்தில் உள்ள நபர்களுக்கு கடுமையாகப் பரிந்துரை செய்யப்படுகின்றது. *→ விசேடமாகத் தொற்றக்கூடிய ஆபத்தில் உள்ள நபர்களுக்கான தகவல்பத்திரம்*
- 16 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி 2022 இலையுதிர் காலத்தில் இலகுவான தொற்றுநோய்களிலிருந்து ஒரு குறைவான மற்றும் குறுகிய காலத்துக்குப் பாதுகாப்பை வழங்கும். தடுப்பூசி பெற்ற இந்தக்குழு நபர்களுக்கு கடுமையான நோய் தொற்றும் என்ற ஆபத்து ஏற்கனவே உள்ள பாதுகாப்புக்கு குறைவாகவே உள்ளது.

### யாருக்கு 2022 இலையுதிர்காலத்தில் ஒரு பூஸ்டர் தடுப்பூசி பரிந்துரை செய்யப்படுகின்றது?

2022 இலையுதிர்காலத்தில் பூஸ்டர் தடுப்பூசி அனைவருக்கும் அதிலும் விசேடமாக தொற்றக்கூடிய ஆபத்தில் உள்ள நபர்களுக்கு கடுமையாகப் பரிந்துரை செய்யப்படுகின்றது:

- 65 வயதுக்கு மேற்பட்ட நபர்கள்
- 16 வயதுக்கு மேற்பட்ட நாள்பட்ட நோயுள்ள நபர்கள்
- வுசளைழஅநை 21 நோயுள்ள 16 வயதுக்கு மேற்பட்டவர்கள்
- கர்ப்பவதிகள்

அத்துடன் 16 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களும் கூட 2022 இலையுதிர்காலத்தில் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளலாம்.
இப்பரிந்துரையானது ஒவ்வொரு மக்கள் குழுக்களையும் பொறுத்து அதன் தன்மை வித்தியாசப்படும்.

| மக்கள் குழுக்கள் | பரிந்துரையின் தன்மை |
|---|---|
| விசேடமாகத் தொற்றும் ஆபத்தில் உள்ள நபர்கள் (BPG) | +++ கடுமை |
| சுகாதார ஊழியர்கள், BGP பராமரிப்பு நபர்கள் | ++ நடுத்தரம் |
| 16-64 வயதுள்ள மிகுதி அனைத்து நபர்கள் | (+) குறைவு |

இதுவரை கொவிட்-19க்கு எதிராக தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாத அனைத்து நபர்களுக்கும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுமாறு பரிந்துரை செய்யப்படுகின்றது.

### வித்தியாசமான மக்கள் குழுக்கள் 2022 இலையுதிர்கால பூஸ்டர் தடுப்பூசியால் எவ்வாறு பயனடைகின்றனர்?

- <u>விசேடமாக தொற்றக்கூடிய ஆபத்தில் உள்ள நபர்கள்</u>
  இந்தக் குழு கடுமையாக நோயுறுவதற்கு அதிஉச்ச ஆபத்தைக் கொண்டுள்ளதுடன் இவர்களுக்கு முன்னைய தடுப்பூசியின் பாதுகாப்பு முன்னராகவே குறைந்துவிடுகின்றது. மேலதிகமான பூஸ்டர் தடுப்பூசி ஆகக் குறைந்தது சில மாதங்களுக்காவது கடும் நோய்களுக்கான பாதுகாப்பை மேம்படுத்துகின்றது.
  அத்துடன் அதிக பலவீனமான நோயெதிர்ப்புச்சக்தி கொண்டவர்கள் கூட (நோய் அல்லது சிகிச்சை காரணமாக) மற்றும் 80 வயதுக்கு மேற்பட்டவர்கள், ஏற்கனவே இரண்டாவது பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றவர்கள், ஒரு கடுமையான நோய் ஏற்படுவதிலிருந்து தம்மைப் பாதுகாக்க இதைப்பெற்று மீளவும் மேம்படுத்தலாம்.
- <u>சுகாதார ஊழியர்கள், பராமரிப்பு நபர்கள்</u>
  இந்தக் குழுவைப் பொறுத்தவரை தடுப்பூசி பெற்ற நபர்களுக்கு கடும் நோய் ஏற்படும் ஆபத்து, ஏற்கனவே இருக்கும் பாதுகாப்பால் மிகக் குறைவாகவே உள்ளது. மேலதிகமான பூஸ்டர் தடுப்பூசி ஒரு குறைவான மற்றும் குறுகிய காலத்துக்கு தொற்றிலிருந்து பாதுகாப்பதுடன் நோயின் தன்மையை குறைத்துக்கொள்கின்றது: இருப்பினும் வைரஸ் வேறு நபர்களுக்குப் பரப்புவதை தடுக்க முடியாது. விசேடஆபத்திலுள்ள நபர்களின் பராமரிப்பை தொடர்ந்து நிலைநிறுத்தவும் சுகாதாரத்துறை விநியோகத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும் தொற்று ஒன்று ஏற்படுவதற்கான அபாயத்தை சிறிதளவு குறைக்க விரும்பும் இக் குழுவிலுள்ள அனைவருக்கும் இப் பூஸ்டர் தடுப்பூசி பரிந்துரைக்கப்படுகின்றது.
- <u>16-64 வயதுள்ள மிகுதி அனைத்து நபர்கள்</u>
  இந்தக் குழுவைப் பொறுத்தவரை தடுப்பூசி பெற்ற நபர்களுக்கு கடும் நோய் ஏற்படும் ஆபத்து, ஏற்கனவே இருக்கும் பாதுகாப்பால் மிகக் குறைவாகவே உள்ளது. மேலதிகமான பூஸ்டர் தடுப்பூசி ஒரு குறைவான மற்றும் குறுகிய காலத்துக்கு தொற்றிலிருந்து பாதுகாப்பதுடன் நோயின் தன்மையை குறைத்துக்கொள்கின்றது: இருப்பினும் வைரஸ் வேறு நபர்களுக்குப் பரப்பப்படுவதை தடுக்க முடியாது.
  பூஸ்டர் தடுப்பூசி, தனிப்பட்ட மற்றும் அல்லது தொழில் காரணமாக தொற்றுநோய் ஏற்படும் ஆபத்தைக் குறைத்துக் கொள்ள விரும்பும் அனைத்து நபர்களுக்கும் சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

16 வயதுக்கு உட்பட்ட நபர்களுக்கு 2022 இலையுதிர்கால பூஸ்டர் தடுப்பூசி பரிந்துரை செய்யப்படவில்லை, ஏனென்றால் இளையோர் மற்றும் பிள்ளைகளுக்கு கடும் கொவிட்-19 நோய் ஏற்படும் ஆபத்து மிகவும் குறைவாகவே உள்ளது. மிகஅதிகமாக 5 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு முன்னர் ஏற்பட்ட ஒரு தொற்றுநோய் அல்லது தடுப்பூசி காரணமாக கொரொனா வைரசுக்கு எதிரான தடுப்புச்சக்தி உள்ளது.

### எப்போது பூஸ்டர் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டும்?

2022 இலையுதிர்கால பூஸ்டர் தடுப்பூசி, இறுதியாக கொவிட்-19-தடுப்பூசி பெற்று 4 மாதங்களின் பின்பு அல்லது கொரொனா வைரஸ் தொற்றி 4 மாதங்களின் பின்பு ஏற்றிக்கொள்ளலாம்.
இது விசேடமாகத் தொற்றக்கூடிய ஆபத்திலுள்ள நபர்கள், ஏற்கனவே இரண்டு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றியிருந்தாலும் பொருந்தும்.
செயல்திறனற்ற தடுப்பு மருந்துகளுடன் வழங்கப்படும். வேறு தடுப்பூசிகள் (உதாரணமாக தொற்றுக்காய்ச்சல் தடுப்பூசி) கொவிட்-19-தடுப்பூசி ஏற்றும் ஒரே வேளையில், அல்லது அதற்கு முன்பு அல்லது பின்பு பெற்றுக்கொள்ளலாம்.

<u>தயவுசெய்து நீங்கள் கவனத்தில் கொள்ளுங்கள்:</u> உங்களுக்கு உயர் காய்ச்சல் உள்ளதா? நீங்கள் நோயுற்றுள்ளீர்களா அல்லது சுகவீனமாக உணர்கின்றீர்களா? அப்படியானால் தடுப்பூசித் தவணையைப் பின்போடுங்கள்.

### இதுவரை கொவிட்-19-தடுப்பூசி பெற்றிருக்காத 16 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு எது பொருந்தும்?

தொற்றுநோயின் இக்காலத்தில் சுவிசில் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாத ஏறத்தாழ அனைத்து நபர்களும் ஆகக் குறைந்தது ஒரு தடவையாவது கொரொனாவைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களது நோயெதிர்ப்புச்சக்தி இதன்மூலம் வைரசுடன் போராடுகின்றது. இதன் காரணமாக விசேடமாகத் தொற்றக்கூடிய ஆபத்திலுள்ள நபர்கள் தவிர்ந்த, ஏனையவர்களுக்கு ஒரு தடுப்பூசி மட்டும் பரிந்துரை செய்யப்படுகின்றது. இதன்மூலம் கடுமையான நோயிலிருந்து பாதுகாப்பு மேம்படுத்தப்படுகின்றது. இதற்குப் பதிலாக இரண்டு தடுப்பூசிகள் 4 கிழமை இடைவெளியில் ஏற்றிக்கொள்ளும் வசதியுள்ளது.

விசேடமாகத் தொற்றக்கூடிய ஆபத்திலுள்ள நபர்கள்,: வேறு தகவல் பத்திரத்தைப் பார்க்கவும் *→ விசேடமாகத் தொற்றக்கூடிய ஆபத்தில் உள்ள நபர்களுக்கான தகவல்பத்திரம்*

**எவ்விதமான தடுப்பூசி பரிந்துரை செய்யப்படுகின்றது?**
இலையுதிர்காலத் தடுப்பூசிக்கு நாங்கள் மாற்றுத்-தழுவிய (bivalenter) mRNA-தடுப்பு மருந்து அல்லது Novavax இன் புறொட்டின் தடுப்பு மருந்து, இவை கிடைக்குமாக இருந்தால் பரிந்துரை செய்கின்றோம். இதன்போது முன்னைய தடுப்பூசிகளுக்கு எந்தத் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது என்பது முக்கியமானதல்ல.
mRNA-தடுப்பு மருந்தைப் பொறுத்தவரை (Pfizer/BioNTech அல்லது Moderna) 2022 இலையுதிர்கால பூஸ்டர் தடுப்பூசி அதேவேளை இதுவரை பாவித்த (monovalenten) தடுப்பு மருந்துகள் மாற்றுத்-தழுவிய (bivalenter) தடுப்பு மருந்துகள் பொருத்தமானது.
தற்போதைய தரவுகள், monovalenten mRNA- தடுப்பு மருந்துகள் அத்துடன் Omikron- வகைகள் கடுமையான நோய்தொற்றிலிருந்தும் வைத்தியசாலைக்கு செல்வதிலிருந்தும் பாதுகாப்பதை எடுத்துக் காட்டுகின்றன.

முக்கியம்: கர்ப்பவதிகள் மற்றும் பாலூட்டும் நபர்கள் ஒரு mRNA-தடுப்பு மருந்தை (Novavax இன் புறொட்டின் தடுப்பு மருந்து அல்ல) தடுப்பூசியில் ஏற்றிக்கொள்ள வேண்டும்.

**எந்த நபர்களுக்கு குறிப்பிட்ட தடுப்பு மருந்துகள் ஒத்துவராது?**
பின்வரும் நபர்களுக்கு நாங்கள் **mRNA-தடுப்பு மருந்துள்ள** கொவிட்-19-தடுப்பூசியை **பரிந்துரைக்கவில்லை:**

- தடுப்பு மருந்தில் அடங்கியுள்ள பொருட்களினால் கடுமையான ஒவ்வாமை ஏற்படுமென உறுதிப்படுத்தப்பட்ட நபர்கள், உ.ம். Polyethylenglykol (PEG) அல்லது Tromethamin (TRIS).

பின்வரும் நபர்களுக்கு நாங்கள் Novavax இன் **புறொட்டின் தடுப்பு மருந்துள்ள** கொவிட்-19-தடுப்பூசியை **பரிந்துரைக்கவில்லை:**

- தடுப்பு மருந்தில் அடங்கியுள்ள பொருட்களினால் கடுமையான ஒவ்வாமை ஏற்படுமென உறுதிப்படுத்தப்பட்ட நபர்கள், அனைத்திலும் மேலாக Polysorbat 80, Saponine, Matrix-M.

இவ்வகையானவர்கள் தயவுசெய்து ஒரு ஆண் அல்லது பெண் ஒவ்வாமை வைத்தியரிடம் ஆலோசனை பெறுங்கள். மேலதிக தகவல்களை நீங்கள் FOPH இன் இணையத்தளத்தில் காணலாம்: www.foph-coronavirus.ch/vaccination

**தடுப்பூசி பாதுகாப்பானதா?**
**<u>கொவிட்-19க்கு எதிரான தடுப்பூசி பாதுகாப்பானது.</u>** சுவிசில் ஒவ்வொரு தடுப்பு மருந்துக்கும் ஒரு அனுமதி தேவை. இதற்கு அவை பாதுகாப்பு, பயன்பாடு மற்றும் தராதரம் போன்ற எதிர்பார்ப்புகளை நிறைவுசெய்ய வேண்டும். ஒரு தடுப்பூசியின் பயன்பாடு அதனால் ஏற்படும் ஆபத்தை விட குறிப்பிடக்கூடியளவு அதிகமாக இருக்க வேண்டும். அதன்பின் மட்டுமே இத் தடுப்பூசி சுவிசில் பரிந்துரை செய்யப்படுகினறது. துறைசார் நபர்கள் தொடர்ந்தும் தடுப்பு மருந்தின் பாதுகாப்பு மற்றும் செயல்திறன் குறித்துக் கண்காணித்துக் கொள்கின்றனர்.

**எவ்விதமான பக்கவிளைவுகள் சாத்தியம்?**
ஒவ்வொரு தடுப்புசியின்போதும் பக்கவிளைவுகள் ஏற்படலாம். அதிகமாக அவை மென்மையானவை முதல் இலேசானவை மற்றும் விரைவில் மறைந்துவிடும்.
தடுப்பூசியின் பின்பு இந்தப் பக்கவிளைவுகள் <u>அதிகம்</u> ஏற்படுகின்றது:

- கையில் நீங்கள் தடுப்பூசி பெற்றுக்கொண்ட இடம், நோவும், சிவப்படையும், அல்லது வீங்கும்.
- களைப்படைதல்
- தலையிடி
- தசை- மற்றும் மூட்டு நோவு
- பொதுவான அறிகுறிகளான நடுக்கத்துடனான காய்ச்சல், காய்ச்சல் உணர்வு அல்லது இலேசான காய்ச்சல்
- குமட்டல்
- வீக்கம் அல்லது நோவெடுக்கும் அக்குள் நிணநீர் சுரப்பிகள்
- தோல் படலம் மற்றும் சொறிதல்

இவ்வகையான எதிர்விளைவுகள், உடல் நோய்களுக்கு எதிராகப் பாதுகாப்பைப் பலப்படுத்துவதை எடுத்துக் காட்டுகின்றது. இந்தப் பக்கவிளைவுகள் வழமையாக சில நாட்களில் மறைந்துவிடும். உங்களுக்கு ஒரு கிழமையின் பின்பும் தொடர்ந்து பக்கவிளைவுகள் உள்ளதா? அவை கடுமையாகின்றதா? அல்லது உங்களுக்குக் கவலையளிக்கின்றதா? அப்படியானால் உங்கள் குடும்ப வைத்தியரிடம் எடுத்துக் கூறுங்கள்.

<u>மிகவும் அரிதாகவே</u> கடுமையான <u>பக்கவிளைவுகள்</u> ஏற்படுகின்றன. ஒருசில நபர்களுக்கு தடுப்பூசி ஏற்றிய உடனே கடுமையான <u>ஒவ்வாமை எதிர்விளைவுகள்</u> ஏற்படுகின்றது. உதாரணமாக கடுமையான வீக்கம், சிவப்படைதல், சொறிதல் அல்லது மூச்செடுப்பதில் சிரமம் போன்றவை.

மிகவும் அரிதான வேளைகளில் தடுப்பூசி ஏற்றிய 14 நாட்களுக்குள் இதயதசை அழற்சி அல்லது இதயப்பை வீக்கமடையலாம். இவை அதிகமாக மென்மையானதாகவும் நல்ல சிகிச்சையளிக்கக் கூடியதாகவும் இருக்கும். <u>இதயத்தசை-அழற்சியின்</u> வழமையான அறிகுறிகளாக மார்பு நோவு, மூச்சுத்திணறல் மற்றும் கடுமையான இதயத்துடிப்பு, அநேகமாக இவை தடுப்பூசி ஏற்றிய இரு கிழமைக்கு உள்ளாக வரலாம்.

இவ்வகையான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக உங்கள் குடும்ப வைத்தியரைத் தொடர்பு கொள்ளுங்கள்.

## மேலதிக தகவல்கள்

**கட்டணம்:** பரிந்துரை செய்யப்படும் கொவிட்-19-தடுப்பூசி உங்களுக்கு இலவசமானது.

**தடுப்பூசி ஏற்றும் வசதிகள்:** எங்கு நீங்கள் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளலாம் என்பது குறித்து இணையத்தளத்தில் அல்லது உங்கள் மாநில தகவல் பக்கத்தில் நீங்கள் தகவல் அறிந்து கொள்ளுங்கள் *(www.foph-coronavirus.ch/cantons).*

கொவிட்-19-தடுப்பூசி குறித்த மேலதிக தகவல்களை நீங்கள் FOPH இணையத்தளத்தில் காணலாம்: *www.foph-coronavirus.ch/vaccination* அல்லது உங்கள் வைத்தியரிடம் அல்லது உங்கள் மருந்தகத்தில் கேளுங்கள்.

**இணையவழி:**

- *Wie funktioniert die Covid-19-Impfung? | BAG (bag-coronavirus.ch)*
- *Häufig gestellte Fragen (FAQ) (admin.ch)*